**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 600** **நாள்: 22.10.2026**

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் கண்ணப்பர் திடல் மாநகராட்சி சமுதாயக் கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண மையத்தினையும், படவேட்டம்மன் கோயில் தெருவில் உள்ள சமையல் கூடம் தயார்நிலையில் இருப்பதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, முன்னெச்சரிக்கைப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை மீட்டு தங்கவைப்பதற்காக 227 நிவாரண மையங்கள் மற்றும் உணவு சமைப்பதற்காக 112 மைய சமையல் கூடங்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. கடந்த 17.10.2026 முதல் 21.10.2026 வரை 5 நாட்களில் மாநகராட்சிப் பகுதிகளில் 56,100 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளன.

தற்போது சென்னையில் அதிக கனமழையினையொட்டி, அனைத்து நிவாரண மையங்களிலும் பொதுமக்களை தங்க வைப்பதற்கான அடிப்படை வசதிகள் தயார்நிலையில் இருப்பதையும், மைய சமையல் கூடங்களில் உணவு சமைப்பதற்கு தேவையான பொருட்கள் இருப்பதையும் மீண்டும் இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உறுதி செய்யப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, இராயபுரம் மண்டலம், வார்டு-58க்குட்பட்ட கண்ணப்பர் திடல் மாநகராட்சி சமுதாயக் கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண மையத்தினை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளதை ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு-53க்குட்பட்ட கொண்டித்தோப்பு, படவேட்டம்மன் கோயில் தெருவில் உள்ள சமையல் கூடத்தில் சமையல் பாத்திரங்கள், உணவுப் பொருட்கள் மற்றும் அடிப்படை வசதிகள் தயார்நிலையில் இருப்பதைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின் போது, வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., மண்டல அலுவலர் திரு.சத்தியநாராயணன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**பின்னர் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது :**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை தங்கவைப்பதற்கான நிவாரண மையங்களையும், உணவு தயாரிப்பதற்கான மைய சமையல் கூடங்களையும் ஆய்வு செய்து வருகிறோம். அதனடிப்படையில் இன்று இந்த நிவாரண மையம் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை தங்க வைப்பதற்காக மாநகராட்சியின் 15 மண்டலங்களிலும் 227 நிவாரண மையங்கள், உணவு தயாரிப்பதற்காக 112 மைய சமையல்

கூடங்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த நிவாரண மையங்களில் பொதுமக்களுக்கு தேவையான பாய், போர்வை, தலையணை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களும், மைய சமையல் கூடங்களில் உணவு சமைப்பதற்கு தேவையான பொருட்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மைய சமையல் அறைகளில் 12,399 கிலோ அரிசி, 2,355 கிலோ துவரம்பருப்பு, 1590 லி. எண்ணெய், 696 கிலோ உப்பு உள்ளிட்ட உணவுப் பொருட்கள் தற்காலிகமாக சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. தேவை இருக்கும்பட்சத்தில் கூடுதலாக சேகரித்து வைக்கப்படும்.

கடந்த 17ஆம் தேதி நள்ளிரவு மிக அதிகமாக பெய்த கனமழையிலும், 21ஆம் தேதி பெய்த கனமழையிலும் பெரிய சேதங்கள் ஏற்படாமல், பொதுமக்களுக்கு பெரிய சிரமங்கள் ஏற்படாமல், காலையிலேயே போக்குவரத்து சீர்செய்யப்பட்டது. தண்ணீர் தேங்கியிருந்த 100க்கும் மேற்பட்ட பகுதிகளில் மோட்டார் பம்புகள் மூலம் நீர் வெளியேற்றப்பட்டு, இயல்பு நிலைக்கு கொண்டு வரப்பட்டது.

கடந்த ஐந்து நாட்களில் உள்ள அனுபவத்தை கொண்டு வடகிழக்குப் பருவமழையின் 90 நாட்களை எதிர்கொள்ள வேண்டும். இந்த காலகட்டத்தில் அதீத கனமழை போன்ற சவால்கள் வரலாம். அதேபோல் காற்றும் ஒரு சவாலாக இருக்கலாம்.

தற்போது வங்காள விரிகுடா பகுதியில் ஒரு காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியிருக்கின்றது. இந்த தாழ்வு மண்டலமானது ஒரு மண்டலமாகவும் அடுத்தகட்டமாக ஒரு புயல் உருவாக வாய்ப்புள்ளது என்று கணிக்கப்பட்டுள்ளது. வல்லுனர்கள் இந்த புயல் ஆந்திரப்பிரதேசம் அல்லது ஒரிசா நோக்கி போகலாம். ஒருவேளை சென்னையை ஒட்டி இருந்தால் காற்றோட தாக்கம் சென்னையிலும் இருக்கும் எனத் தெரிவித்துள்ளனர்.

காற்றோட வேகம் இங்கே சேதங்கள் ஏற்படுத்தக் கூடாது என்ற நோக்கத்தில் கூடுதலாக சக்திமான் போன்ற இயந்திரங்கள், மர அறுவை இயந்திரங்கள், டெலஸ்கோபிக் மர அறுவை இயந்திரங்கள், கூடுதலாக 220 பவர் இயந்திரங்கள் மூலம் 78,000-க்கும் மேற்பட்ட மரங்களின் கிளைகள் கத்தரித்து அகற்றப்பட்டுள்ளது. இதில் அபாயத்தில் உள்ள மரங்கள் முற்றிலுமாக அகற்றப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் கோரிக்கைகளின் அடிப்படையிலும் மரங்களின் கிளைகள் அகற்றப்படுகிறது. மரங்கள் மற்றும் மரங்களின் கிளைகளை அகற்றுவதற்காக கூடுதலாக 2,200 பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், தளர்வான இணைப்பில் உள்ள பொருட்கள் மற்றும் பேனர்கள், விளம்பரப் பலகைகள் ஆகியவையும் அகற்றப்பட்டு வருகிறது. இந்தப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மழைக்காலங்களில் பொதுமக்களுக்கு நோய்த் தொற்று பாதிப்பு ஏற்படாமல் இருப்பதைக் கருத்தில் கொண்டு நாளொன்றுக்கு சராசரியாக 103 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு 40 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வந்த நிலையில் தற்போது மழையினை முன்னிட்டு படிப்படியாக உயர்த்தப்பட்டு தற்போது 103 மருத்துவ முகாம்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மருத்துவ முகாம்கள் மூலம் நேற்று மட்டும் 3,300-க்கும் மேற்பட்ட பயனாளிகள் பயனடைந்துள்ளார்கள்.

மழைநீர் தேங்கும் வேளச்சேரி, அண்ணாநகர் பகுதியில் படகுகள் முன்கூட்டியே தயாராக வைக்கப்பட்டுள்ளன. மாநகராட்சியின் சார்பில் 36 படகுகளும், மீனவர் நலத்துறையின் சார்பில் 97 படகுகளும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

கல்குட்டை, வேளச்சேரி போன்ற பகுதிகள் எல்லாம் இயல்பாகவே ரொம்ப தாழ்வான பகுதிகள், ஒரு ஏரி போன்ற பகுதிகள். அந்த இடத்தில் நடந்த நகரமயமாக்கல் காரணமாக எப்போதும் தண்ணீர் தேங்கும் சூழ்நிலை அமைந்தது. இங்கு மோட்டார் பம்புகள் மூலம் தான் தண்ணீரை வெளியேற்ற முடியும். எனவே, இங்கு 100 எச்.பி.க்கு மேலே இருக்கிற அதிக குதிரைத்திறன் கொண்ட மோட்டார் பம்புகள் பொருத்தப்பட்டு, வேளச்சேரி பகுதி, ஏ.ஜி.எஸ் காலனியில் இருந்த தண்ணீர் முழுமையாக அகற்றப்பட்டுள்ளது. கல்குட்டையில் இருக்கிற தண்ணீரையும் மக்களுக்கு பாதிப்பு இல்லாத வண்ணம் அருகிலுள்ள சதுப்பு நிலத்திற்கு வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த மழைக்காலத்தில் வீடு இல்லாத மக்கள் பாலத்தின் அடியில் தங்கியிருக்கிறார்கள். மாநகராட்சியில் 57 இரவு காப்பகங்கள் செயல்பட்டு வருகிறது. இந்த காப்பகங்களில் மக்களை மீட்டு தங்க வைத்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்து பராமரித்து வருகிறோம். குறிப்பாக ஒரு வாரம் முன்னர் சேப்பாக்கம் பகுதியில் இருக்கிற 23 குடும்பங்களில் உள்ள 66 நபர்களை மீட்டு மெரீனாவில் உள்ள தற்காலிகக் காப்பகத்தில் தங்க வைத்துள்ளோம். இந்த மாதிரி பேரிடர் இருக்கிற காலகட்டங்களில் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள் அந்த மக்கள்தான், வீடே இல்லாத மேல் கூரை இல்லாத அந்த மக்களுக்குதான் மிகவும் அதிக முக்கியத்துவம் கொடுத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனத் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**